முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA3 பரீட்சை – 2018 சனவரி

## (AA31) நிதிக் கணக்கீடும் அறிக்கையிடலும்

(Financial Accounting and Reporting)

2018-01-20
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 10
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தரவும்.***

(3) ***விடைகள்*** *உமக்குத் தரப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றை தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்கள்* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***செயல் வினைச் சொற்களின்*** *நிரலில் தரப்பட்ட வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

இந்தப் பகுதியிலுள்ள நான்கு (04) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

பயனுடைய நிதித் தகவல்களின் அடிப்படைத் தர ரீதியான குணாம்சங்கள் தொடர்புடைமையும் (relevance) விசுவாசமான முன்னிலைப்படுத்தலும் (faithful representation) ஆகும்.

நிதித் தகவல்களின் "தொடர்புடைமை" மற்றும் "விசுவாசமான முன்னிலைப்படுத்தல்" ஆகிய அம்சங்களை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

### வினா 02

கீழே தரப்பட்டுள்ள மீதிகள் **வரையறுக்கப்பட்ட ABC** கம்பனியின் 2017 மார்ச் 31 ஆந் திகதியின்படியான நிதிநிலைக் கூற்றிலிருந்து பிரித்தறியப்பட்டதாகும்:

| | **2017 மார்ச் 31 இல் (ரூ.)** |
|---|---|
| சொத்துக்கள்: | |
| பொறித்தொகுதி மற்றும் எந்திரங்கள் - கிரயத்தில் | 5,000,000 |
| பொறித்தொகுதி மற்றும் எந்திர திரள் தேய்மானம் | (2,500,000) |
| **பொறித்தொகுதி மற்றும் எந்திரத்தின் முன்கொணரற் பெறுமதி** | **2,500,000** |

2017 மார்ச் 31 ஆந் திகதி பொறித்தொகுதி மற்றும் எந்திரம் மீது வரித் தேவைகளுக்காக அனுமதிக்கப்பட்ட திரள் தேய்மானம் ரூ.3,000,000/- ஆகும். 2016 ஏப்ரல் 01 இல் பிற்போடப்பட்ட வரிச் சொத்து / பரிப்பு கணக்கில் மீதி எதுவும் இருக்கவில்லை.

***நீங்கள் செய்யவேண்டியவை:***

(a) 2017 மார்ச் 31 இல் **வ/ப ABC கம்பனியின்** தற்காலிக வேறுபாட்டினை **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(b) 2017 மார்ச் 31 திகதியில் **வரையறுக்கப்பட்ட ABC** கம்பனியின் பிற்போடப்பட்ட வரிப் பரிப்பினைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

*(வ./ப. ABC கம்பனியின் வரிவீதம் 28% எனக் கொள்க.)* (மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

நிறுவனங்கள் அவற்றின் வியாபார நடவடிக்கைகளை சிந்தித்துத் திட்டமிட்டு அறிக்கையிடும் முறையில் ஒன்றித்தல் அறிக்கையிடும் (Integrated Reporting) முறைமை தாக்கம் செலுத்துகின்றது. ஒன்றித்தல் அறிக்கையிடுதலானது அடிப்படையில் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்ட, ஆனால் ஒன்றிலிருந்து ஒன்று முற்றிலும் வேறுபடாத எட்டு ஆக்கக்கூறுகளை உள்ளடக்குகின்றது.

***நீங்கள் செய்யவேண்டியவை:***

(a) ஒன்றித்தல் அறிக்கையிடலின் நோக்கத்தினைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) ஒன்றித்தல் அறிக்கையிடலிற் பிரதான கூறுகள் மூன்றினை (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)
(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட லைசன் ஓட்டோ (தனியார்) கம்பனியின்** 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று மற்றும் அத்திகதியின் நிதிநிலைக் கூற்று ஆகியவற்றி லிருந்தான பிரித்தறிதல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன:

| ஆண்டு முடிவு | **2017 மார்ச் 31 (ரூ.'000)** |
|---|---|
| எந்திர விற்பனை மீதான இலாபம் | 500 |
| ஆண்டிற்கான எந்திரத் தேய்மானம் | 1,250 |

| | **2017 மார்ச் 31 இல் (ரூ.'000)** | **2016 மார்ச் 31 இல் (ரூ.'000)** |
|---|---|---|
| எந்திரங்கள் - கிரயத்தில் | 3,000 | 2,500 |
| எந்திரத் திரள் தேய்மானம் | (2,000) | (1,500) |

2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டின்போது விற்பனை செய்யப்பட்ட எந்திரத்தின் கிரயம் ரூ.1,000,000/- ஆகும். நடப்பு ஆண்டிற்கான தேய்மானம் விற்பனைத் திகதி வரையில் விற்பனை செய்யப்பட்ட எந்திரத்தின் தேய்மானத்தையும் உள்ளடக்குகின்றது. புதிய எந்திரம் 2017 மார்ச் 31 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டதுடன் 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அவ் எந்திரம் மீது தேய்மானம் செய்யப்படவில்லை.

***நீங்கள் செய்யவேண்டியது:***

2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின்போது பழைய எந்திர விற்பனையினால் கிடைத்த பணம் மற்றும் புதிய எந்திரக் கொள்வனவிற்குச் செலுத்திய காசு ஆகியவற்றினை வெவ்வேறாகக் காட்டும் வகையில் நிகர காசுப் பாய்வுக் கூற்றின் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான பிரித்தெடுப்பினைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

இப்பகுதியிலுள்ள மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 05

(a) உற்பத்திக் கம்பனியான **கெமிக்கெம் PLC**, 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டின்போது புதிய பொருளொன்றை விருத்தி செய்தது. இவ்வாண்டில் இந்தப் பொருளுக்காக மேற்கொண்ட ஆராய்ச்சிக்கு ரூ.3 மில்லியனை கம்பனி செலவுசெய்தது. கம்பனி இந்தப் பொருளுக்கான ஆக்க உரிமையினை (patent right) 2017 மார்ச்சில் பதிவு செய்துள்ளதுடன் பொருளின் வர்த்தக உற்பத்தியை 2017 ஏப்ரலில் ஆரம்பித்தது. 2016/17 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இப்புதிய பொருளுக்காகச் செய்யப்பட்ட ஏனைய செலவுகள் கீழ்வருமாறு:

| | ரூ. |
|---|---|
| புதிய பொருளின் ஆக்க உரிமைப் பதிவுக் கட்டணம் | 25,000 |
| ஊழியர் பயிற்சிக்கு இறுக்கப்பட்ட கிரயம் | 300,000 |
| விற்பனை ஊக்குவிப்புக் கிரயம் | 50,000 |
| புதிய பொருளை உற்பத்தி செய்வதற்காகச் செலவுசெய்த தொழில்முறைக் கட்டணம் | 250,000 |

***நீங்கள் செய்யவேண்டியது:***

2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டில் **கெமிக்கெம் PLC** நிதிக் கூற்றுக்களில் செலவாக தாக்கல் செய்யப்பட வேண்டிய தொகையையும் அருவச் சொத்தாக (intangible asset) மூலதனப்படுத்தியிருக்க வேண்டிய தொகையையும் ***மதிப்பிடுக.*** (06 புள்ளிகள்)

(b) **ABC கம்பனி** உற்பத்திப் பொறி ஒன்றினை நிறுவுவதற்காக 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி ஆண்டிற்கு 15% வட்டிக்கு ரூ.20 மில்லியனை வங்கியொன்றிலிருந்து கடனாகப் பெற்றது. உற்பத்திப் பொறியின் நிருமாணம் 2016 மே 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவுக்கு வந்தது.

வங்கிக் கடனின் பயன்படுத்தப்படாத தொகை தற்காலிக வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு 2017 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காலப்பகுதியில் ரூ.300,000/- இனை வட்டி வருமானமாகப் பெற்றது.

***நீங்கள் செய்யவேண்டியது:***

2017 மார்ச் 31 ஆந் திகதி புதிய உற்பத்திப் பொறி தொடர்பில் மூலதனமாக்கப்பட வேண்டிய கடன்படுகைக் கிரயத்தைக் ***கணிக்குக.*** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**தியசென் மனுபக்சரிங் PLC (DM)** 2017 மார்ச் 31 மற்றும் 2016 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான முற்றடக்கமான வருமானக் கூற்றுகள் மற்றும் அந்தத் திகதிகளில் நிதிநிலைக் கூற்றுகளிலிருந்தான பிரித்தெடுப்புகள் கீழே தரப்பட்டுள்ளன:

**முற்றடக்க வருமானக் கூற்றுகளிலிருந்து பிரித்தெடுப்புகள்** *(ரூ.'000)*

| ஆண்டு முடிவு | **2017 மார்ச் 31** | **2016 மார்ச் 31** |
|---|---|---|
| விற்பனை | 28,750 | 27,050 |
| விற்பனைக் கிரயம் | 20,400 | 18,750 |
| மொத்த இலாபம் | 8,350 | 8,300 |
| வட்டிச் செலவு | 540 | 220 |
| வருமான வரி | 1,240 | 1,070 |
| ஆண்டிற்கான இலாபம் | 5,220 | 6,085 |

**நிதிநிலைக் கூற்றில் பிரித்தெடுப்புகள்** *(ரூ.'000)*

| | **2017 மார்ச் 31இல்** | **2016 மார்ச் 31 இல்** |
|---|---|---|
| நடைமுறைச் சொத்துகள் (தொக்குகள் நீங்கலாக) | 10,470 | 8,260 |
| நடைமுறைப் பரிப்புகள் | 3,200 | 3,875 |
| வியாபார வருமதிகள் | 3,460 | 2,220 |
| தொக்குகள் | 5,240 | 4,920 |
| பங்குதாரர்கள் உரிமையாண்மை | 22,030 | 15,410 |
| தனிச்சங்கள் | 3,500 | 2,000 |

**DM** இன் கடன் விற்பனைகள் மொத்த விற்பனையின் 70% எனக் கொள்க.

**DM** இன் போட்டிக் கம்பனியான **மிகாரா மனுபக்சரிங் PLC (MM)** யின் 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்ட சில விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| மொத்த இலாப வீதம் | 30% |
| நிகர இலாப வீதம் | 25% |
| தொழிற்படுத்திய மூலதனம் மீதான வருமானம் (ROCE) | 32.4% |
| விரைவுச் சொத்து விகிதம் | 2.08 தடவைகள் |
| கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் | 60 நாட்கள் |

**நீங்கள் செய்யவேண்டியது:**

2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக **DM** மற்றும் **MM** கம்பனிகளின் செயற்பாடுகளை **பகுப்பாய்வு செய்க.**

*(உதவிக் குறிப்பு : நீர் மேலே தரப்பட்டுள்ள விகிதங்களை **DM** கம்பனிக்கும் கணிக்கலாம்.)*

(10 புள்ளிகள்)

## வினா 07

**வரையறுக்கப்பட்ட ABC** கம்பனியின் 2017 மார்ச் 31 மற்றும் 2016 மார்ச் 31 ஆகிய திகதிகளில் நிதிநிலைக் கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன:

**வரையறுக்கப்பட்ட ABC கம்பனி**

**நிதிநிலைக் கூற்று** *(ரூ.'000)*

| | **2017 மார்ச் 31 இல்** | | **2016 மார்ச் 31 இல்** | |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்:** | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (கிரயத்தில்) | 10,000 | | 10,000 | |
| திரள் தேய்மானம் | (4,500) | | (4,000) | |
| முன்கொணரற் தொகை | | 5,500 | | 6,000 |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | | | |
| தொக்குகள் | 5,500 | | 6,000 | |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 8,100 | | 5,160 | |
| காசும் காசுச் சமானங்களும் | 250 | 13,850 | 300 | 11,460 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **19,350** | | **17,460** |
| **உரிமையாண்மையும் பரிப்புகளும்** | | | | |
| **உரிமையாண்மை:** | | | | |
| சாதாரண பங்கு மூலதனம் | | 10,000 | | 10,000 |
| மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்கு மூலதனம் | | 4,000 | | 2,500 |
| கைக்கொள் இலாபம் | | 2,300 | | 400 |
| **மொத்த உரிமையாண்மை** | | 16,300 | | 12,900 |
| **நடைமுறையல்லாப் பரிப்புகள்:** | | | | |
| வங்கிக் கடன் | | 350 | | 1,250 |
| **நடைமுறைப் பரிப்புகள்:** | | | | |
| வங்கிக் கடன் | 750 | | 750 | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 1,660 | | 2,300 | |
| செலுத்த வேண்டிய கடன் வட்டி | 40 | | 60 | |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 250 | 2,700 | 200 | 3,310 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புகளும்** | | **19,350** | | **17,460** |

மேலதிக தகவல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன:

(1) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான வரிச் செலவு ரூ.600,000/-.

(2) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கிக் கடன் வட்டிச் செலவு ரூ.380,000/-.

(3) இந்த ஆண்டின்போது ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பில் கொள்வனவுகளோ அல்லது விற்பனைகளோ இடம்பெறவில்லை.

(4) இந்த ஆண்டின்போது பங்கிலாபம் செலுத்தப்படவோ அல்லது பிரகடனப்படுத்தப்படவோ இல்லை.

**நீங்கள் செய்யவேண்டியது:**

**நேரில் முறையைப்** பயன்படுத்தி 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட ABC கம்பனியின்** காசுப் பாய்வுக் கூற்றினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

இந்தப் பகுதியிலுள்ள இரண்டு (02) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

2017 மார்ச் 31 இல் **கஜபா PLC** யின் பரீட்சை மீதி கீழ்வருமாறு:

**கஜபா PLC**

**2017 மார்ச் 31 ஆந் திகதியில் பரீட்சை மீதி** *(ரூ.'000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் - 2,000,000 சாதாரண பங்குகள் | | 20,000 |
| மீட்கத்தகு முன்னுரிமைப் பங்கு மூலதனம் (1,000,000 பங்குகள்) | | 5,000 |
| 2016 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம் | | 6,500 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்: | | |
| காணியும் கட்டடமும் (காணிப் பெறுமதி – ரூ.20,000,000/-) | 25,000 | |
| மோட்டார் வாகனங்கள் | 15,000 | |
| அலுவலக உபகரணம் | 4,000 | |
| 2016 ஏப்ரல் 01 இல் திரள் தேய்மானம்: | | |
| கட்டடம் | | 2,000 |
| மோட்டார் வாகனங்கள் | | 6,000 |
| அலுவலக உபகரணம் | | 2,600 |
| தொக்குகள் - 2017 மார்ச் 31 இல் - கிரயத்தில் | 9,500 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 11,000 | 6,000 |
| வரிமதிப்பாண்டு 2015/16 க்கு செலுத்த வேண்டிய வருமான வரி | | 400 |
| வங்கிக் கடன் | | 3,000 |
| வங்கி மீதி | 3,000 | |
| காசுக் கையிருப்பு | 200 | |
| ஐயுறவுக் கடன் ஏற்பாடு – 2016 ஏப்ரல் 01 இல் | | 1,500 |
| விற்பனைக் கிரயம் / விற்பனைகள் | 107,000 | 160,000 |
| செலுத்தப்பட்ட இடைக்காலப் பங்கிலாபம் - சாதாரண பங்குகள் | 2,000 | |
| மீட்கத்தகு முன்னுரிமைப் பங்குகள் மீது செலுத்திய பங்கிலாபம் | 500 | |
| நிருவாகச் செலவுகள் | 11,460 | |
| விநியோகச் செலவுகள் | 16,740 | |
| நிதிச் செலவுகள் | 5,600 | |
| செலுத்திய வருமான வரி | 2,000 | |
| | **213,000** | **213,000** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

(1) கம்பனி ஆண்டின்போது கீழ்வரும் சொத்தினை விற்பனை செய்தது:

| கொள்வனவுத் திகதி | சொத்து | கிரயம் (ரூ.) | விற்பனைத் திகதி | விற்பனைப் பெறுவனவு (ரூ.) |
|---|---|---|---|---|
| 01.10.2013 | விநியோக வான் | 2,300,000 | 31.12.2016 | 1,200,000 |

விற்பனைப் பெறுவனவு, வங்கிக் கணக்கில் வரவுப்பதிவு செய்யப்பட்டதுடன் விற்பனைக் கணக்கில் செலவுப்பதிவு செய்யப்பட்டது. இவை தவிர வான் விற்பனை தொடர்பில் வேறெந்தப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(2) 2017 மார்ச் 31 ஆந் திகதி கம்பனி அதன் கட்டடத்தை மீள்மதிப்பீடு செய்தபோது அதன் பெறுமதி ரூ.2 மில்லியனால் அதிகரித்திருக்கக் கண்டது. இது கணக்கேடுகளில் இன்னும் பதிவுசெய்யப்படவில்லை.

(3) 2017 மார்ச் 31 இல் தொக்குகளின் நிகர தேறுகைப் பெறுமதி – ரூ.9,375,000/- ஆகும்.

(4) கிரயம் அல்லது மீள்மதிப்புப் பெறுமதியில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் கணிக்கப்படும். ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் பயன்தரும் ஆயுட்காலங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| கட்டடம் | : | 25 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | : | 04 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | : | 08 ஆண்டுகள் |

(5) வியாபார வருமதிகள் தொடர்பில் கீழ்வருவனவற்றிற்கு செம்மையாக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்:

- இந்த ஆண்டின்போது ரூ.100,000/- பெறுமதியான வியாபாரக் கடன்பட்டோர் மீதி அறவிட முடியாததாக மாறியது. எனினும் முன்னைய ஆண்டில் இந்த வியாபாரக் கடன்பட்டோர் மீதி தொடர்பில் ஐயுறவுக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டது.
- 2017 மார்ச் 31 இல் நிலுவையிலுள்ள வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் 5% பொதுவான ஐயுறவுக்கடன் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

(6) 2017 மார்ச் 31 இல் கீழ்வரும் செலவுகள் கணக்கேடுகளில் அட்டுறுவாக்கப்படுதல் வேண்டும்:

| | ரூ. |
|---|---|
| தொலைபேசி மற்றும் மின் கட்டணம் | 60,000 |
| விளம்பரம் | 200,000 |

(7) 2017 மார்ச் 31 இல் நிலுவையிலுள்ள வங்கிக் கடனின் அரைப்பங்கு அடுத்த ஆண்டில் தீர்க்கப்பட வேண்டும்.

(8) வரிமதிப்பாண்டு 2016/17 க்கான கம்பனியின் வருமான வரிப் பரிப்பு ரூ.3,500,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

(9) 2017 மே 31 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பணிப்பாளர் சபையானது 2017 மார்ச் 31 இல் இருந்த சாதாரண பங்குகள் ஒவ்வொன்றிற்கும் இறுதிப் பங்கிலாபமாக ரூ.1/- செலுத்துவதற்குத் தீர்மானித்தது.

(10) நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக பணிப்பாளர் சபையினால் 2017 யூன் 15 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

**கஜபா PLC** க்கு பிரசுரிப்புக்குப் பொருத்தமான வகையில் கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப, நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று) (10 புள்ளிகள்)

(b) 2017 மார்ச் 31 இல் நிதிநிலைக் கூற்று (07 புள்ளிகள்)

(c) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று (03 புள்ளிகள்)

(d) 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரண மாற்றங்களைக் காட்டும் கூற்று (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(A) (a) 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி **வரையறுக்கப்பட்ட பீமாவின்** 70% பங்கு மூலதனத்தை **காமுணு PLC** ரூ.12 மில்லியனை முதலீடு செய்து கொள்வனவு செய்தது. அந்தத் திகதியில் **வரையறுக்கப்பட்ட பீமா கம்பனியின்** இனங்காணத்தகு நிகரச் சொத்துக்களின் சீர்மதிப்பு அவற்றின் ஏட்டுப் பெறுமதிகளுக்குச் சமமாகவும் கட்டுப்பாடற்றோர் நாட்டத்தின் சீர்மதிப்பு ரூ.3 மில்லியனாகவும் இருந்தன.

சுவீகரிப்புத் திகதியில் **வரையறுக்கப்பட்ட பீமா கம்பனியின்** ஏடுகளில் கீழ்வரும் மீதிகள் காணப்பட்டன :

| | **ரூ. ('000)** |
|---|---|
| குறிப்பிடு மூலதனம் - சாதாரண பங்குகள் | 7,000 |
| பொது ஒதுக்கங்கள் | 1,800 |
| கைக்கொள் இலாபம் | 2,000 |

**நீங்கள் செய்யவேண்டியது:**

ஒன்றித்தல் மீதான நன்மதிப்பினைக் **கணிக்குக.** (05 புள்ளிகள்)

(b) **காமுணு PLC** மற்றும் **வரையறுக்கப்பட்ட பீமா கம்பனியின்** 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்றுகள் கீழ்வருமாறு:

***2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான***
***முற்றடக்க வருமானக் கூற்றுகள்*** *(ரூ.'000)*

| | **காமுணு PLC** | **வ/ப பீமா** |
|---|---|---|
| வருமானம் | 250,000 | 110,000 |
| விற்பனைக் கிரயம் | (140,000) | (72,000) |
| **மொத்த இலாபம்** | **110,000** | **38,000** |
| **ஏனைய வருமானம்:** | | |
| வட்டி வருமானம் | 800 | 250 |
| பங்கிலாப வருமானம் | 1,600 | 45 |
| ஏனைய வருமானம் | 1,550 | - |
| | **113,950** | **38,295** |
| **செலவுகள்:** | | |
| விநியோகச் செலவுகள் | (40,000) | (13,500) |
| நிருவாகச் செலவுகள் | (10,000) | (3,000) |
| நிதிச் செலவுகள் | ( 8,000) | (2,000) |
| **வரிக்கு முன் இலாபம்** | **55,950** | **19,795** |
| வருமான வரி | (14,500) | (2,000) |
| **ஆண்டிற்கான இலாபம்** | **41,450** | **17,795** |
| பிற முற்றடக்க வருமானம் | - | - |
| **ஆண்டிற்கான மொத்த முற்றடக்க வருமானம்** | **41,450** | **17,795** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் கிடைக்கப்பெற்றுள்ளன:

(1) இந்த ஆண்டின்போது **காமுணு PLC** ரூ.2,000,000/- கிரயமான தொக்கினைக் கிரயத்தில் 25% இலாபம் வைத்து **வ/ப பீமா கம்பனிக்கு** விற்பனை செய்தது. 2017 மார்ச் 31 ஆந் திகதி **வ/ப பீமா கம்பனியின்** இறுதித் தொக்குகள் **காமுணு PLC** யிடமிருந்து கொள்வனவு செய்த ரூ.500,000/- பெறுமதியான தொக்கினை உள்ளடக்கியிருந்தது.

(2) **வ/ப பீமா கம்பனியானது காமுணு PLC** யின் தொழிற்சாலை வளாகத்தில் அமைந்துள்ள தனது களஞ்சியத்திற்கான வாடகையாக மாதாந்தம் ரூ.50,000/- இனை 2016 ஏப்ரல் 01 இலிருந்து **காமுணு PLC** க்குச் செலுத்துகின்றது.

(3) **வ/ப பீமா கம்பனி** ஆண்டுக்கு 12% வட்டிக்கு ரூ.5,000,000/- கடனை **காமுணு PLC** யிடமிருந்து 2016 மார்ச் 31 இல் பெற்றிருந்தது. 2016/17 ஆம் ஆண்டிற்கான வட்டி, முழுவதுமாக **காமுணு PLC** க்குச் செலுத்தப்பட்டது. ஆண்டின் காலப்பகுதியில் கடனுக்கான மூலதன மீள்கொடுப்பனவு எதுவும் செய்யப்படவில்லை.

(4) **காமுணு PLC** யின் பங்கிலாப வருமானம், ஆண்டிற்கான இலாபத்திலிருந்து **வ/ப பீமா கம்பனியால்** செலுத்தப்பட்ட இடைக்கால பங்கிலாபம் ரூ.500,000/- இனை உள்ளடக்குகிறது.

(5) 2017 சனவரி 01 ஆந் திகதி **காமுணு PLC** ரூ.1,000,000/- கிரயமான காணி ஒன்றினை ரூ.1,400,000/- க்கு **வ/ப பீமா கம்பனிக்கு** விற்பனை செய்தது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த முற்றடக்க வருமானக் கூற்றினைத் **தயாரிக்குக.** (14 புள்ளிகள்)

(B) **வ/ப XYZ கம்பனிக்கு** 2017 மார்ச் 31 மற்றும் 2016 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்காகக் கீழ்வரும் விகிதங்கள் கணிக்கப்பட்டுள்ளன:

| மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டு | 2017 | 2016 |
|---|---|---|
| நடப்பு விகிதம் | 1.2 | 1.5 |
| கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் | 75 நாட்கள் | 45 நாட்கள் |
| தொக்கு இருப்புக் காலம் | 35 நாட்கள் | 25 நாட்கள் |

**நீங்கள் செய்யவேண்டியது:**

2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டின் மேற்படி விகிதங்கள் ஒவ்வொன்றினதும் வேறுபாட்டிற்கான சாத்தியமான இரு (02) காரணங்கள் வீதம் **குறிப்பிடுக.** (06 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |